# SIDP 3.0 ( 2024 –2025 )

2024 – 2025 கல்வியாண்டில் தமிழகத்தில் பள்ளி புத்தாக்க மேம்பாட்டு திட்டம் ( SIDP 3.O) அரசு, அரசு உதவிபெறும் மற்றும் தகுதி அளவில் உதவிபெறும் பள்ளிகளில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதில் வழிகாட்டி ஆசிரியர்கள் முக்கிய பங்கு வகுக்கின்றார்கள். எனவே வேலூர் மாவட்டத்தில் உள்ள உயர்நிலை பள்ளியில் ( 6 முதல் 10 வரை செயல்படும்) பள்ளிகளில் வழிகாட்டி ஆசிரியர் ஒருவர் மற்றும் ( 6 முதல் 12 வரை செயல்படும்) மேல்நிலை பள்ளிகளில் இரண்டு வழிகாட்டி ஆசிரியராக நியமிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே அனைத்து அரசு /அரசு நிதியுதவி உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் வழிகாட்டி ஆசிரியர்களை தேர்வு செய்யும்போது, அவர்கள் தன்னார்வுடையவர்களாக, எந்தவித பிரதிபலனும் எதிர்பாராத மாணவர்களின் வளர்ச்சியில் அக்கறை காட்டுபவர்களாக இருத்தல் வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழிகாட்டி ஆசிரியர்ளின் நியமனம் செய்து, அவ்வாறு நியமனம் செய்யப்பட்ட விவரத்தினை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள Google Sheet –ல் பூர்த்தி செய்து நாளை (28.08.2024) பிற்பகல் 2.00 மணிக்குள் பதிவுகள் மேற்கொள்ள அனைத்து அரசு /அரசு நிதியுதவி உயர் /மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு : Google Sheet –Link

// ஓம்.செ.மணிமொழி //
முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்.

பெறுநர்
அனைத்து அரசு /அரசு நிதியுதவி உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள்
வேலூர் மாவட்டம்.
நகல்
வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) அவர்களுக்கு தொடர்நடவடிக்கையின் பொருட்டு அனுப்பிவைக்கப்படுகிறது